முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 176

திங்கட்கிழமை
20 மே 2024

வைகாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம்: இழுத்தடிக்கும் போக்கில் தமிழரசு!

## நேற்றைய மத்தியகுழுக் கூட்டத்திலும் முடிவில்லை

**யாழ்ப்பாணம், மே 20**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பான தனது நிலைப்பாட்டை தெரிவிக்காமல் இழுத்தடிக்கும் போக்கையே இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்கின்றது. அந்தக் கட்சியின் மத்திய குழுவில் இந்த விடயம் நேற்று ஆராயப்பட்ட போதும் முடிவு எதையும் எடுக்காமல் ஒத்திவைத்துள்ளது.**

11

வழக்காளி கோரும் நிவாரணத்தை வழங்கி

# வழக்கை முடிவுறுத்த சமரசக்குழு அமைப்பு

## சுமந்திரன், தவராசா அதனைக் கையாள்வர்
## புதிய தெரிவுகள் முடியும் வரை மாவையே தலைவர்

வவுனியா, மே 20

திருகோணமலை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை முடிவுறுத்தி கட்சியின் தெரிவுகளை மீளவும் நடத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின்

11



# ரணில் முன்னே; தினேஷ் பின்னே!

யாழ்ப்பாணம், மே 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு 3 நாள் பயணமாக வருகை தரவுள்ள நிலையில் இந்த மாத இறுதியில் பிரதமர்

11

# போதைமாத்திரை: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மே 20

25 உயிர்கொல்லி போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சங்கானையில் 27 வயது இளைஞன் ஒருவனைக் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-125)

சகோதரியின் பெயரில்

# ஆள்மாறாட்டம் செய்த வெளிநாட்டுப்பிரஜை கைது

**யாழ்ப்பாணம், மே 20**

**போலிக்கடவுச்சீட்டு, போலி வங்கிப்புத்தகம், போலி ஆவணங்கள் என்பவற்றைத் தயாரித்தமை, ஆள்மாறாட்டம் செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் நெதர்லாந்துப் பிரஜாவுரிமையைக் கொண்ட ஒருவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கைது செய்யப்**

11

# இன்று முதல் வடக்கில் தொடர் மழை

யாழ்ப்பாணம், மே 20

தென்னிலங்கையில் நிலவும் தொடர் மழையுடனான காலநிலை வடக்கு மாகாணத்தில் இன்று தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரையில் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட இலங்கை நிலப்பரப்பை அண்மித்து நீடிக்கும் வளிமண்டல குழப்பமானது இன்று முதல் யாழ்ப்பாணத்தை அண்டிய கடற்பரப்பில் காற்று சுழற்சியாக வலுப்பெறுவதற்கு சாதகமான சூழல் உருவாகியுள்ளது.

11

# உலங்குவானூர்தி விபத்து; ஈரானிய ஜனாதிபதியை காணோம்!!!

## சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியீடு
## ஈரானிடமிருந்து உத்தியோகபூர்வ தகவலில்லை

அஜர்பைஜான், மே 20

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்டவர்கள் பயணித்த உலங்குவானூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதையடுத்து அவர்கள் காணாமற்போயுள்ளதாக அவை குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, கடும்பனிமூட்டத்தையடுத்து மிகக் கடினமான தருணத்தில் உலங்குவானூர்தி தரையிறக்கப்பட்டதாகவும் ஈரானிய ஜனாதிபதி உள்ளிட்டோர் பாதுகாப்பாக உள்ளதாகவும் இன்னொரு தகவல் தெரிவித்தது. ஆனாலும் ஈரானிடமிருந்து

11

# வடக்கில் 400 பட்டதாரிகளுக்கு சனியன்று ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 20

உயர்தர வகுப்புகளுக்கு கற்பிப்பதற்காக பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 400 பட்டதாரிகள் ஆசிரியர் நியமனத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அழைப்புக் கடிதம் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் இன்று முதல் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்மூழ்கிகளைத் தடுக்க அமெரிக்காவிடம் உதவி

## தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தகவல்

**கொழும்பு, மே 20**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அனுமதியின்றி ஊடுருவும் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தடுக்கவும், கண்காணிக்கவும் அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் துணைச் செயலாளர் டொனல்ட்லூ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை அண்மையில் சந்தித்திருந்தார்.


இந்தச் சந்திப்பில் இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக விசேட உள்நாட்டு சமுத்திரவியல் ஆய்வுக்கு குழு ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வேறு நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வர வேண்டிய தேவை ஏற்படாது.

உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதால் இராஜதந்திரரீதியில் பல்வேறு நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்கொள்கிறது. இலங்கைக்கான விசேட சமுத்திரவியல் ஆய்வுக்குழு காணப்படுமாயின் எந்த விதமான பிரச்சினைகளும் ஏற்படாது. மறுபுறம் அந்த நாடுகளின் தேவைக்கு ஏற்ப தரவுகளையும் எம்மால் வழங்கமுடியும்.

ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கையின் இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஏற்கனவே கூறியுள்ளன. உள்நாட்டு ஆய்வுக்குழு ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படும் இந்திய பெருங்கடல் தரவுகளை ஏனைய நாடுகளுடன் தேவைக்கு ஏற்ப பகிர்ந்துகொள்ளமுடியும்

அனுமதியின்றி இலங்கை கடற்பரப்புக்குள் ஊடுருவும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணிக்கவும் அவற்றைத் தடுப்பதற்குமான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது. இவை அனைத்துக்கும் ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது- என்றார். (எ-இ)



# உயர்வடையும் டெங்கு மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 20

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23ஆயிரத்து 731 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப்பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்தவிடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளமையால் டெங்கு நோய்ப் பரவலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி இந்த வருடத்தில் மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


கொழும்பு மாவட்டத்தில் 5,057 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2,214 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,879 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# போதை பொருள்கள் அழிப்பு!

கொழும்பு, மே 20

அண்மைக்காலத்தில் வழக்குகள் நிறைவடைந்த சுமார் 400 கிலோகிராம் போதைப் பொருள்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குச் சொந்தமான புத்தளம் வனாத்தவில்லு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட விசேட அடுப்பில் குறித்த போதைப்பொருள்கள் அழிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




# வருவாய் ஈட்டும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, மே 20

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் 120.3 பில்லியன் ரூபா இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த பொருளாதார அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 617.6 பில்லியன் ரூபா நட்டத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதிவு செய்தது. மத்திய வங்கியின் அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரச நிறுவனங்களுக்கு 17.7 பில்லியன் ரூபா கடனைச் செலுத்த நேரிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இரண்டு இலட்சம் பேரின் மின்னிணைப்பு துண்டிப்பு

கொழும்பு, மே 20

நாட்டில் சுமார் இரண்டு இலட்சம் பாவனையாளர்களின் மின்சார இணைப்பு முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக மின்சார இணைப்பை இன்னும் அவர்கள் மீளப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாள்களுக்குள் நிலுவைக் கட்டணத்தைச் செலுத்தி மீள் இணைப்பைப் பெற்றுக்கொள்ளாவிடின், மின்விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு, மின்பாவனைக்கான கணக்கும் இரத்துச் செய்யப்படும் என மின்சாரசபை தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் சுமார் 3 கோடிக்கு அண்மித்த சிவப்பு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன என்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார். (ச-இ)

# இலங்கையில் ரவிசங்கர்



மன்னார், மே 20

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின்பேரில் இந்தியாவின் பிரபல ஆன்மீகத் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா சீதாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேக பெருவிழாவில் பங்கேற்றார்.

அத்துடன் இளைஞர்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் நாடளாவிய ரீதியில் வாழும் கலையின் 12 திறன் மேம்பாட்டு மையங்களையும் திறந்துவைக்கவுள்ளார். (ச-இ)

# குடும்பத்தவர் மூவர் வெட்டிக்கொலை

கொழும்பு, மே 20

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொடூரமாக வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குருநாகலில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. தந்தை, தாய் மற்றும் மகன் ஆகியோரே வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்தநிலையில் கொல்லப்பட்டுள்ளனர்.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# இலங்கை பொலிஸாருக்கு அமெரிக்காவில் பயிற்சி

கொழும்பு, மே 20

இலங்கைப் பொலிஸாருக்கு விசேட பயிற்சி வழங்க அமெரிக்க இணக்கம் வெளியிட்டுள்ளது.

அரச சொத்துகளை கொள்ளையிட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரை கைதுசெய்வது தொடர்பான பயிற்சியே வழங்கப்படவுள்ளது.

இதனூடாக திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை விரைவாகக் கைது செய்யமுடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்து!

கொழும்பு, மே 20

**பல வருடங்களாக நடத்தப்படாமலுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் வலியுறுத்தியுள்ளது.**

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடனான சந்திப்பில் தேர்தல்கள் ஆணைக்குழு இதனை சுட்டிக்காட்டியது.

இந்தத் தேர்தல் கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்படாமல் இருப்பதால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கும், வலுவான உள்ளூர் நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் அவசியமானது என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. (ச-இ)

## மின் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மின் கட்டணங்களை குறைக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உமாஓயா மின்னுற்பத்தி திட்டத்தினூடாக தேசிய மின் கட்டமைப்புக்கு 120 மெகாவாட்ஸ் மேலதிக மின்சாரம் கிடைக்கின்றமை கட்டணக் குறைப்பு விடயத்தில் நேரடித் தாக்கம் செலுத்தும். மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கடவுச்சீட்டை ஒப்படைத்த டயானா



கொழும்பு, மே 20

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது கடவுச்சீட்டை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஒப்படைத்துள்ளார்.

டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்து உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

டயானா கமகே இலங்கைப் பிரஜை இல்லையென்பதால், அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாதென உயர்நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது.

டயானா கமகே வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதிருத்திருந்தது. அதையடுத்தே அவர் தனது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளார். (எ-இ)

## போதைப்பொருள் கடத்திய வர்த்தகர் கைது

மன்னார், மே 20

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 60 இலட்சம் ரூபா பெறுமதியான 'குஷ்' போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கொடை, முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த போதே அவரின் பயணப்பொதிகளிலிருந்து 602 கிராம் நிறையுடைய 'குஷ்'போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தன்சல்களில் சோதனை

கொழும்பு, மே 20

வெசாக் தினத்தை முன்னிட்டு தன்சல்களில் வழங்கப்படும் உணவுகள் உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பின், உடனடியாக அருகிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது. (எ-இ)



# நாடாளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்படும்!

### உதயங்க வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 20

நாடாளுமன்றம் அடுத்தமாதம் 14ஆம் திகதி கலைக்கப்படும் என்றும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவரும், முன்னாள் ரஷ்யத் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி அல்லது 15ஆம் திகதி இரவு நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்றார். (எ-இ)

## தினம் தெரியுமோ?

சோழியன் குடுமி சும்மா ஆடாது. உந்த அமெரிக்கத் தூதுவராயிருக்கிற ஜூலி சங்கும் தேவையில்லாமல் இஞ்ச வந்து போகமாட்டா. அப்பிடி வந்து போனால் அதுக்குப் பின்னால ஏதோ ஒரு பெரிய சம்பவம் நடக்கப் போகுதெண்டதுதான் அர்த்தம். ஜூலி சங்கின்ர பதவிக்காலம் முடியிறதால, ஒரு பிரியாவிடை மாதிரி அவா யாழ்ப்பாணத்துக்கு போனகிழமை வந்தவா. சிவில் அமைப்புக்காரர், அரசியல்வாதியள் எண்டு தெரிஞ்செடுத்த சிலரோட கதைச்சும் பேசினவா. சிவில் அமைப்புகளிட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றித்தான் குடைஞ்சு குடைஞ்சு கேட்டிருக்கிறா. அவையும் பொது வேட்பாளரை நிப்பாட்டினா என்னென்ன லாபங்கள் தமிழருக்கு இருக்கெண்டு விலாவாரியாச் சொல்லியிருக்கினம். அவை சொன்னதையெல்லாம் கடும் ஆர்வமாக் கேட்டுத் தலையாட்டியிருக்கிறா.

அதுக்குப் பிறகு அவா சிறீதரன், சித்தார்த்தன், சார்ள்ஸ் எண்ட மூண்டு எம்.பி.மாரையும் கதைக்கக் கூப்பிட்டிருக்கிறா. போன மூண்டு பேரும் அவாக்கு முன்னால ரண்டு கன்னையாப் பிரிஞ்சிட்டினம். சிறீயரும், சித்தரும் பொதுவேட்பாளரை நிப்பாட்டத்தான் வேணுமெண்டு சொல்லியிருக்கினம். ஆனால் சார்ள்ஸ் இதுக்கு எதிராச் சொல்லியிருக்கிறார். இவை ரண்டு கன்னையா பட்டிமன்றம் நடத்த, அதைக் கொடுப்புக்க சிரிச்சபடி ஜூலி சங், தமிழாக்களின்ர ஒற்றுமையின்ர சீத்துவம் என்ன எண்டதைக் கண்ணாரக் கண்டிருப்பா.

அதாலையோ என்னவோ, விசயத்தை மாத்த வெளிக்கிட்டு, 'சரி, உங்கட தமிழரசுக் கட்சி பிடுங்குப்பாடுகள் எல்லாம் என்ன மாதிரி? எதுக்கு பதவி, வழக்கு எண்டு பிரிஞ்சு நிக்கிறியள்? நீங்கள் இப்பிடி ஆளுக்கொரு திசையில பிரிஞ்சு நிக்கிறதைப் பாக்க எங்களுக்கெல்லோ கவலையாக் கிடக்கு. ஒற்றுமைப்பட்டு நிக்கிற நேரத்திலபோய் இப்பிடி பிரிஞ்சு நிக்கிறது சரியா?' எண்டு அக்கறையா ஜூலி சங் கேட்டிருக்கிறா. ஆனால் நல்லவேளையா இந்தவிசயத்தில சிறீயர் அவாவுக்கு பிடிகுடுக்கேலை.

'பிரச்சினையள் இருக்குத்தான். ஆனால் அதுகளை இதிலை கதைக்கமுடியாது. என்னதான் இருந்தாலும் சித்தார்த்தன் வேறகட்சி. வேற ஒரு சந்தர்ப்பத்தில அதைப்பற்றிக் கதைப்பன். அப்பிடிக் கதைக்கேக்க இந்த வழக்கு, பிரச்சினை, பிளவுகளுக்கெல்லாம் திரைக்கதை, வசனம், டைரக்சன் எல்லாம் ஆரெண்டு வடிவாச் சொல்லுறன்' எண்டு சிறீயர் சிரிச்சுக்கொண்டே சொல்லியிருக்கிறார். அதைக்கேட்டிட்டு ஜூலி சங்கும், 'எனக்கு எல்லா விசயமும் தெரியும்' எண்ட கணக்கில ஒரு மார்க்கமாச் சிரிப்பிலையே பதிலைச் சொல்லிட்டாவாம்.

என்னதான் பிரியாவிடைக்கு ஜூலி சங் யாழ்ப்பாணம் வந்தாலும், பொதுவேட்பாளர், தமிழரசுக் கட்சியின்ர உள்வீட்டுப் பிரகண்டங்கள் பற்றி என்னத்துக்கு விடுத்து விடுத்துக் கேக்க வேணும்? ஏனெண்டால், பொதுவேட்பாளர் விசயம் அமெரிக்காவுக்கு அவ்வளவாப் பிடிப்பில்லையாம். அதால தமிழரசுக் கட்சியில உள்ள பிரச்சினையை வைச்சு, அவையை இந்த விசயத்திலயும் ரண்டா அடிபடவிட்டால், அப்பிடியே பொது வேட்பாளரை நிப்பாட்டிறதில ஒற்றுமை இல்லையெண்ட மாதிரி சனத்தை நம்பப்பண்ணலாம். அதுக்குத்தான் ஜூலி சங் நாடி பிடிச்சுப் பார்த்திருக்கிறாபோல. ஆனால் பாவம், அவா இப்பிடியெல்லாம் கஷ்டப்படாமலே, எங்கட ஆக்கள் பொதுவேட்பாளரை நிப்பாட்டுறதோ, இல்லையோ எண்டதில அடிபடத் தொடங்கிட்டினம். நேற்றையான் தமிழரசுக் கட்சியின்ர மத்தியகுழுக் கூட்டம் அதுக்கு நல்ல உதாரணம். அதைப் பற்றி பிறகு கதைப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதையல் தோண்டிய 7 பேர் கைதாகினர்!

மன்னார், மே 20
மன்னார், பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பேசாலை சிறுத்தோப்பு காட்டுப்பகுதியில் புதையல் தோண்டுவதாகக் கிடைத்த தகவலையடுத்தே மேற்படி ஏழு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படை அதிகாரி எனத் தெரியவந்துள்ளது.
ஏனையவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். அனைவரும் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-56)

## மெல்பேர்னில்
# நீதிகோரி போராட்டம் வெள்ளையர் பங்கேற்பு



மெல்பேர்ன், மே 20
முள்ளிவாய்க்கால் இனப்படு கொலைக்கு நீதிவேண்டி மெல்பேர்னில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பல்லின மக்களின் பங்கேற்பில் விக்ரோரிய நூலகத்துக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் விக்ரோரிய மாநிலத்தின் கிறீன் கட்சியின் முன்னாள் தலைவர் சமந்த ரட்ணம் மற்றும் பல சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு நீதியை வலியுறுத்தினர். (ச)

## துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம், மே 20
பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை மீள ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கு முன்னர், பாடசாலைகளில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலிகாம வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு, வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிறட்லி விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப-66)

## ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 20
பசுக்களை சட்டவிரோதமாகக் கடத்தி, இறைச்சிக்காகக் கொலைசெய்யும் கொடூரச் செயலைக் கண்டித்து, இலங்கை சிவசேனை, உருத்திரசேனை, ஸ்ரீ சண்முகசேனா ஆகிய இந்து அமைப்புகள் இணைந்து, யாழ்.மல்லாகத்தில் முன்னெடுக்கப்படவிருந்த கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும், சீரற்ற காலநிலை காரணமாக மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ப-66)

# வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி விசாகப் பொங்கல் விழா

■ மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்



ஈழத்தில் விளங்கும் சக்தி ஆலயங்களில் முல்லைத்தீவில் கோவில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகும்.
தொன்மை வரலாற்றுப் பெருமையும், சமய பாரம்பரியமும் கொண்ட திருத்தலமாகும். ஆகம வழிபாட்டு மரபுகளும், இத்தலத்துக்கே உரிய ஐதீகங்களும் பொருத்தமுற இணைந்து இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. பலபல அற்புதங்கள், அருட்சிறப்புகள் இந்தத் தலத்தில் நிகழ்ந்துள்ளன.

**பொங்கல் வழிபாடு**

வருடந்தோறும் வைகாசி மாதத்தில் இடம்பெறும் பொங்கல் அம்பிகை அடியார்களிடத்தில் ஆன்மீக எழுச்சியை உண்டுபண்ணும். பாண்டிய மன்னனுக்கு நீதி புகட்டியவள் கண்ணகி, மதுரையம்பதியில் தன் கற்புத்தீயால் அதர்மத்தை அழித்தவள். சேரநாடு விண்ணகம் புகுந்த கண்ணகாதேவி முல்லைத்தீவில் நந்திக்கடற்கரை வெளியே தனக்கான உறைவிடமாகக்கொண்டு அருள்பாலித்து வருகின்றாள்.
சிலப்பதிகார கண்ணகி கற்பின் திறத்தால் மதிக்கப்பட்ட மானிடப்பெண்.
ஈழத்தில் கண்ணகி அம்மன் கோவில் கொண்ட தலங்கள் பல குறிப்பிடப்படுகின்றன. வற்றாப்பளை என்பது பத்தாவதாக கண்ணகி அம்மன் வந்தமர்ந்த இடம் என்றும், அது பத்தாம் பளை என வழங்கியதெனவும் காலப்போக்கில் மருவி 'வற்றாப்பளை' ஆயிற்று எனும் செவிவழிக்கதை உண்டு.

**கடல் நீரில் தீபம்**

வற்றாப்பளை கண்ணகி அம்மனின் அருட்சிறப்புகளில் தெய்வீகத்தை உணர்த்தும்வகையில் இன்றும் நந்திக்கடல் நீரில் விளக்கெரியும் அற்புதம் உலகம் அறிந்த விடயம். இத்தகு வரலாற்றுச் சிறப்புகளோடு விளங்கும் இந்த ஆலயத்தில் வைகாசிப் பொங்கல் திருவிழா இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கூடுதலாகும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் குறைவாகவே கிடைக்கும். மகாவிஷ்ணு வழிபாடு நலம் சேர்க்கும்.

**கடகம்:** அரசாங்க காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். மனதில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனஸ்தாபம் ஏற்படும். பொறுமை அவசியம். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மறைமுகத் தொல்லைகள் ஏற்படும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர்ப் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டியநாள். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மகிழ்ச்சிகரமான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ட்ரூடோ எனும் 'நாயகன்'!


இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது கொல்லப்பட்டவர்களுக்காகவும் - மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் கனடா தொடர்ந்து நீதிகேட்கும். இந்தப் பயணத்தை கனடா ஒருபோதும் நிறுத்தாது என்று வெளிப்படையாகவே தெரிவித்தும் - எச்சரித்தும் இருக்கின்றார் கனேடியப் பிரதமரான ஜஸ்ரின் ட்ரூடோ.

போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை ட்ரூடோவும் அவர் தலைமையிலான கனடாவும் கொழும்பிடம் வலியுறுத்துகின்றமை இதுவொன்றும் முதல்முறையல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதாவது 2022ஆம் ஆண்டில் கனேடிய நாடாளுமன்றத்தில், 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே. இலங்கை அரசாங்கம் அத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், 2009ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமைகள் மீறலுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கும் இராணுவப் பின்புலம் கொண்ட சுனில் ரத்நாயக்க மற்றும் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோருக்கும் பொருளாதாரத் தடைகளை விதித்து உத்தரவிட்டிருந்தது கனேடிய அரசாங்கம். ஆக, தமிழர்களுக்காக ஆத்மார்த்தமாக நீதிதேடும் பயணத்தின், ஒருபகுதி நடவடிக்கைதான் முள்ளிவாய்க்கால் படுகொலை நாளில் ட்ரூடோவிடமிருந்து வெளிப்பட்ட கருத்துகள் என்றும் கொள்ளலாம்.

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்று தமிழர்கள் நீண்டகாலமாகவே தீர்க்கமாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் இதற்கான நீதி இன்னமும் வழங்கப்பட்டதாகவில்லை. குறைந்தபட்சம் இந்தப் போர்க்குற்றங்களுக்கான பரிகார நீதியைக் கண்டடைவதற்கான பொறிமுறைகள்கூட உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு போர்க்குற்றங்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை காத்திரமான நடவடிக்கையொன்றை எடுத்து, நீதியை வழங்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றபோதிலும் அந்தக் காத்திருப்புக்கான பதிலை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, வரலாறு நெடுகிலும் தவறியே வந்திருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கு மாறிமாறி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் கால அவகாசங்கள், போர் தின்றுகொன்ற தமிழினத்தை மேலும் வதைத்தெறிகின்ற நிலையில், கனேடிய அரசாங்கத்தின் இந்த அதிரடி நடவடிக்கைகள், கனேடியத் தலைவர்களின் கருத்துகள், அஞ்சலிப்புகள், ஆற்றுப்படுத்தல்கள் தமிழர்களின் மனக்காயங்களை நிச்சயம் ஆற்றுப்படுத்தும் - மருந்திடும். ஆதலால், ஈழத் தமிழர்களின் விடயத்தில் கனேடிய அரசாங்கத்தை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும். கனேடிய அரசாங்கத்தின் தீர்மானங்களை அடுத்து, அவற்றை நீர்த்துப்போகச் செய்வதில் ராஜதந்திர ரீதியாக இலங்கை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இம்முறை கனடாவில் மேற்கொள்ளப்படும் நினைவேந்தல்களில், 'போர்க்குற்றங்கள்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'விரும்பத்தகாத செயல்கள்' என்ற சொல்லைப் பயன்படுத்தும்படி தூதரக ரீதியிலான அழுத்தமும் கொடுக்கப்பட்டது. ஆயினும், தன் நிலைப்பாட்டில் கனடா இம்மியும் தளர்வதாக இல்லை.

இறுதிப்போர் முடிவடைந்து, ஒரு தசாப்தத்துக்கு மேலாகின்றது. இதுவரை தமிழினம் எத்தனையோ முறையீடல்களை, கவனவீர்ப்புகளை, நீதிக்கான கோரிக்கைகளை உலக நாடுகளிடமும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற 'உலக அரசாங்கங்களிடமும்' மாறிமாறி விடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மட்டும் ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 22க்கும் மேற்பட்ட தடவைகள் தமிழினம் ஏமாற்றப்பட்டிருக்கின்றது. தமிழினம் பறிகொடுத்த உயிர்ப்பலிகள் மென்போக்குத் தன்மையுடனேயே அணுகப்பட்டிருக்கின்றன. ஆனால், உண்மையில் ஏற்படவேண்டிய மாற்றத்துக்கும் - மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புகளுக்கும் கனடா கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கட்டியம் செய்து கொண்டிருக்கின்றது. இந்தக் காத்திரமானதும் -முதுகெலும்புத்தனம் மிக்கதுமான நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டு அவை செயலுருப் பெறுகின்றபோதுதான் இலங்கை போன்ற அரசாங்கங்களுக்கு எதிரான நீதியென்பது, கேந்திர முக்கியத்துவம் - பிராந்திய நலன் என்பவற்றைத் தாண்டி கைக்கெட்டும். சிறுபான்மை மக்களின் இருப்பும் உறுதிப்படுத்தப்படும்...!



# தனிநாடு ஒன்றுதான் தமிழருக்குத் தீர்வு!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 20**

**தனியானதொரு நாட்டை அமைப்பதன் மூலமே தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.**

தமிழீழத் தேசிய துக்கநாளான 15ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவுநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.
தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புக்கெதிராக அனைத்துலக விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை தமிழ்மக்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகிறது. கனடா நாடாளுமன்றம் மே 18 இனைத் தமிழின அழிப்பு நினைவு நாளாகப் பிரகடனம் செய்திருக்கிறது.
இருந்தபோதும் இந்தக் குரல்கள் எல்லாம் தமது நலன்களுக்காக அம்மணமாக ஆடும் வலுமிக்க அனைத்துலக அரசுகளின் காதுகளில் இன்றுவரை விழவே இல்லை. நித்திரை கொள்வதுபோல் நடிப்பவர்களை எவ்வாறுதான் எழுப்புவது? இருந்தும், நீதிக்கான குரலின் தார்மீகப்பலத்தில் நம்பிக்கை வைத்து தமது நீதிக்கான போராட்டத்தைத் தமிழர் தேசம் தொடர்ந்து கொண்டிருக்கிறது - என்றுள்ளது. (ம-66)

# வெள்ள அபாயம்

கொழும்பு, மே 20
நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது. தெதுரு ஓயா, மஹா ஓயா, அத்தனகலு ஓயா, களனி கங்கை, பெந்தர கங்கை, கிங் கங்கை, நில்வல கங்கை, கிரம ஓயா, ஊரு பொக்கு ஓயா, கலா ஓயா, மஹாவலி கங்கை மற்றும் மல்வத்து ஓயா குளங்களைச் சூழவுள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு அபாயம் உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இராணுவ நினைவு தினம்

15ஆவது இராணுவ நினைவுதினம் நேற்று நாடாளுமன்ற மைதானத்துக்கு அருகிலுள்ள இராணுவ நினைவுத் தூபியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-இ)

# கொழும்புக்குள் தேங்கும் வெள்ளம்

கொழும்பு, மே 20
கொழும்பு மாவட்டத்தில் 22 பகுதிகள் வெள்ள அபாயப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.
இந்தப் பகுதிகளில் வடிகால் அமைப்பு சரியானமுறையில் இல்லாமையால் வெள்ள அபாயம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மழை தொடரும்

கொழும்பு, மே 20
நாட்டிலும், நாட்டைச் சூழவுள்ள கடற் பிராந்தியதில் அடுத்த சில தினங்களுக்கு மழை மற்றும் காற்றுக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகம் சூழ்ந்து காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## நாளை

21.05.2024
**செவ்வாய்க்கிழமை**
**வைகாசி - 08**
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 02.52 - 04.22

## நாளொரு நல்வார்த்தை

**என்னிடம் சிறப்பான தனித்திறமை என்று எதுவுமே இல்லை. என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே!**
-ஐன்ஸ்டீன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமெரிக்காவில் கஞ்சா சட்டபூர்வமாக வாய்ப்பு


வொஷிங்டன், மே 20
அமெரிக்காவில் கஞ்சாவை சட்டபூர்வமான போதைப்பொருளாகப் பயன்படுத்த அமெரிக்க அதிபர் பைடன் தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவில் கஞ்சாவை குறைந்த ஆபத்து கொண்ட போதைப்பொருள் என மறுவகைப்படுத்த ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. இதையடுத்தே அங்கு கஞ்சா சட்டபூர்வமான போதைப்பொருளாக மாற்றம் பெறலாம் என்று கருதப்படுகின்றது. எனினும், ஹெரோய்னுக்கான தடை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படாது என்றும் அது அதீத ஆபத்தான போதைப்பொருள் என்பதில் வேறு விவாதத்துக்கு இடமில்லை என்றும் பைடன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

'கஞ்சா பயன்படுத்தியதற்காக யாரும் சிறையில் இருக்கக்கூடாது. கஞ்சாவை அணுகுவதில் தோல்வியுற்றதால், பல உயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த தவறுகளை சரிசெய்வதில் நான் உறுதியாக இருக்கிறேன்' என்று அதிபர் பைடன் தெரிவித்துள்ளார். (ம)

# தமிழகத்தில் பா.ஜ.க. வெல்வது உறுதியே!

## அமித் ஷா தெரிவிப்பு



**சென்னை, மே 20**
**தமிழகம், கேரளா உள்ளிட்ட 5 தென் மாநிலங்களிலும் பா.ஜ.க. இம்முறை பெரும் வெற்றிபெறும் என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவரும் இந்திய உட்துறை அமைச்சருமான அமித் ஷா தெரிவித்துள்ளார்.**

இந்திய மக்களவைத் தேர்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது. நான்கு கட்ட வாக்குப்பதிவுகள் நிறைவடைந்த நிலையில், 'தி இந்து' ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அமித் ஷா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'2014ஆம் ஆண்டில் எங்களின் தேவை உணரப்பட்டு மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தினர். இப்போது 2024ஆம் ஆண்டில் நாங்கள் செய்த சாதனைக்காக மக்கள் எங்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்தவுள்ளனர். இந்தத் தேர்தலில் 400க்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றுவோம். பிரதமர் மோடி மீண்டும் சிறப்பான பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கப் போகிறார்.' என்று அமித் ஷா தெரிவித்தார்.

இம்முறை மக்களவைத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைவாக உள்ளது என்ற கருத்து எம் மத்தியிலும் நிலவுகின்றது. அது எமது வெற்றியைப் பாதிக்காது. காங்கிரஸ் கட்சியினரே தோல்விக்குப் பயந்து வாக்களிக்க வருவதில்லை - என்றும் அமித் ஷா மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## தாய்வான் எல்லையில் சீனாவின் விமானங்கள்

பீஜிங், மே 20
சீனாவின் சுமார் 45 போர் விமானங்கள், தாய்வானுக்குள் ஊடுருவிப் பயணித்துள்ளன என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தாய்வானை சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று சீனா அறிவித்துள்ளது. ஆனால், சீனாவின் இந்த அறிவிப்புக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள சீனா, சீன செங்கொடியின் கீழ் தாம் செயற்படப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அத்துடன், தனது எல்லைகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவுடன் தாய்வான் கூட்டணியும் அமைத்துள்ளது. சீனா - தாய்வான் இராணுவக் கூட்டணியைக் கண்டித்து சீனா கடல் வழியாகவும், வான் வழியாகவும் அவ்வப்போது அத்துமீறலில் ஈடுபடுவது வழமை. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, சீனாவின் சுமார் 45 போர் விமானங்கள், தாய்வானுக்குள் ஊடுருவிப் பயணித்துள்ளன என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் தாய்வானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அமெரிக்க ஆதரவாளர் வெற்றி பெற்றிருந்தார். அவர் பதவியேற்பதற்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், சீனா இந்த அத்துமீறல்களில் ஈடுபட்டு பெரிய தொரு சதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்றும் தாய்வான் பாதுகாப்புத்துறை குற்றஞ்சாட்டியுள்ளது. (ம)

## கார்கீவில் ரஷ்யா துரித முன்னேற்றம்

கீவ், மே 20
**ரஷ்யாவின் ஊடுருவலைத் தவிர்க்கக்கூடிய இராணுவத் தளவாடங்கள் உக்ரைனிடம் இல்லை. கார்கீவில் ரஷ்யப் படைகள் 10 கிலோமீற்றருக்கும் அதிகமான பகுதிகளில் ஊடுருவியுள்ளன என்று உக்ரைனின் அதிபர் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே, போரின் தற்போதைய செல்நெறி தொடர்பிலும் உக்ரைனின் ஆயுத இருப்பு குறித்தும் ஷெலன்ஸ்கி கருத்துத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் கார்கீவ் நகரில் ரஷ்யப் படைகள் முன்னேற்றம் கண்டுள்ளன - என்று ஷெலன்ஸ்கி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ராபாவிலிருந்து 4.50 இலட்சம் பேர் வெளியேற்றம்

காஸா, மே 20
இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரால் கடந்த வாரத்தில் குறைந்தது 4.50 இலட்சம் பலஸ்தீனியர்கள் ராபா நகரில் இருந்து வெளியேற்றப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலில் காஸாவில் குழந்தைகள், பெண்கள் உட்பட 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இதற்கிடையே இலட்சக்கணக்கானோர் தஞ்சம் அடைந்துள்ள தெற்கு காஸாவிலுள்ள ரபா நகரம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பலஸ்தீனியர்களின் கடைசிப் புகலிடமாக உள்ள ராபாவில் இருந்து வெளியேறுமாறு அவர்களை இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

அதையடுத்து ராபாவிலிருந்து அவர்கள் வெளியேறி வருகிறார்கள். (ச-இ)

## கோவேக்ஸாலும் பக்கவிளைவுகள்



வொஷிங்டன், மே 20
கொரோனாவுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களில் சுமார் 30 வீதமானோருக்கு ஓராண்டுக்குப் பின்னர் உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

'ஸ்பிரிங்கர் நேச்சர்' என்ற ஆய்விதழ் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிராகச் செலுத்திக்கொள்ளப்பட்ட கோவேக்ஸின் தடுப்பூசியின் பக்கவிளைவுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தடுப்பூசி செலுத்திக்கொள்ளப்பட்டு ஓராண்டான பின்னர் ஏற்பட்ட நீண்டகால பக்கவிளைவுகள் குறித்து 2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2023 ஒகஸ்ட் வரை, ஆய்வை நடத்தியது.

வளரிளம் பருவத்தைச் சேர்ந்த 635 பேர், 18 வயதுக்கு மேற்பட்ட 291 பேர் என மொத்தம் 926 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், சுமார் 50% பேர் கோவேக்ஸின் செலுத்திக்கொண்ட பின்னர், தங்களுக்கு தொற்றுப் பாதிப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். கோவேக்ஸின் செலுத்திக்கொண்டவர்களில் சுமார் 30வீத பேருக்கு ஓராண்டுக்குப் பின்னர் உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## காஸா அகதி முகாம்களில் இஸ்ரேலால் வான்தாக்குதல்

காஸாவிலுள்ள அகதி முகாம்களில் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நிகழ்த்துகின்றது என்றும், பொதுமக்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ராபாவில் இஸ்ரேல் தற்போது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வரும் நிலையில் பல இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் ராபா விலிருந்து வெளியேறி, காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட இடங்களில் குடியேறிவரும் நிலையிலேயே இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றது என்று பலஸ்தீன தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்க்கை சந்தித்த ஜனாதிபதி ரணில்



கொழும்பு, மே 20

உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான டெஸ்லா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ருவிற்றர் தளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்தோனேஷியாவில் இடம்பெறவுள்ள 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் பங்கேற்க ஜனாதிபதி சென்றபோதே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

உலகளாவிய ஸ்டார்லிங் (Starlink) வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கான நடைமுறைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ச)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## 2023ம் ஆண்டின் முத்திரை தீர்வை கட்டண நிதி - 2024

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை முத்திரை தீஉவைக் கட்டண நிதியைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்த்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசிய போட்டிக்கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V** இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்குபிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் **20.05.2024ம் திகதியிலிருந்து 03.06.2023 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு **04.06.2023 ம் திகதி பி.ப** 01.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகள்ளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தகாலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப் படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | அராலி பகுதி வீதிகள் புனரமைப்பு (அராலி கிழக்கு மீன்பிடி வீதி புனரமைப்பு) NP/14/41(17)/02/SD/12/ Fisheries Road/2024 | 2.136 Mn. | 60 நாட்கள் | C8&C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.08.2024 | Rs. 22,000.00 | 03.09.2024 |

கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 27.05.2024 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**
**20.05.2023**

(cr.42464) (N-1)

# கசிப்புடன் ஒருவர் கைது



யாழ்., மே 20

மானிப்பாய் பகுதியில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரைச் சோதனையிட்டபோதே அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. (ம-125)

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 13.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 14.06.2024 மற்றும் 15.06.2024

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ் / ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ் /பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் / கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2601 : 021 222 6022

www.peoplesbank.lk
PEOPLE'S BANK

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 • 12 • 1953

மறைவு
23 • 05 • 2021



## பெரியதம்பி பற்குணராஜா

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி மூன்று ஆண்டுகள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

லக்ஸ்மி வாசா
மயிலங்கூடல், இளவாலை.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உயிலங்குளம் ஆரம்ப மருத்துவமனைக்குத் தேவையான ஒரு தொகுதி மருத்துவப் பொருள்கள், கடந்த செவ்வாய்க் கிழமை கையளிக்கப்பட்டன. மருத்துவமனைக்குப் பொறுப்பான மருத்துவர் துஷ்யந்தனின் கோரிக்கைக்கமைய, புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இவற்றை வழங்கியுள்ளார். (ப-56)



சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு அனலைதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் அனலைதீவு மருத்துவமனை வளாகத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (எ-9)




போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல் தொடர்பான திட்டமிடல் கலந்துரையாடல் நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நல்லூர்ப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. தெரிவுசெய்யப்பட்ட ஐந்து கிராமங்களில் போதைப் பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டன. (எ-66)

சர்வதேச அன்னையர் தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் உடற்கல்வி நெறி மாணவி வி. உஷாநந்தினி தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மூத்த எழுத்தாளரும், உளவள ஆலோசகருமான திருமதி கோகிலா மகேந்திரன், கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-66)



# மரண அறிவித்தல்



## செல்லையா மௌனசுந்தரம்

சரவணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மௌனசுந்தரம் அவர்கள் நேற்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மாணிக்கத்தியாகராஜா (அமரர்), கமலாதேவி (அமரர்), சிவபாதசுந்தரம் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரராஜா (கனகராயன்குளம்), மனோராஜ் (பிரான்ஸ்), மலர்விழி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், விக்கினேஸ்வரி, நிரஞ்சினி, ஆதீசன், ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண், இலக்கியா, ஹரிஷன், டிலன், அக்ஷயா, அபிநயா, அரிப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், யோகேஸ்வரி (அமரர்), இராசலட்சுமி, கமலாதேவி, அன்னலஷ்மி, விஜயலஷ்மி, ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரி (அமரர்), அட்சயலிங்கம் (அமரர்), சுகிர்தரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சண்முகநாதன் (அமரர்), குலநாயகம் (அமரர்), சிவகுமார், சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும், விஜயலஷ்மியின் உடன்பிறவாச் சகோதரனும், திருச்செல்வம் - யோகம்மா, சிவஞானம் (அமரர்) - பத்மாவதி, குணநாயகம் (அமரர்), இராசலட்சுமி (அமரர்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மண்கும்பான் மேற்கு எனும் விலாசத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக சரவணை புன்னாலம் கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
மகேந்திரராஜா 077 177 7738
மனோராஜ் +33758567573
நிரஞ்சினி +33758315820
ஆதீசன் 077 023 3709
மலர்விழி +077 706 0116
ஜெகதீஸ்வரன் +077 981 0537

**முகவரி:**
கு.ஆதீசன்,
மண்கும்பான் மேற்கு,
வேலணை.

(CS/54979) J-1

# மரண அறிவித்தல்



## ஞானம் நாகமணி

மண்டான் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், திக்கம்புரை, பலாலி தெற்கு, வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம் நாகமணி அவர்கள் நேற்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானம் - பாலி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பவளம் (சந்திரா) அவர்களின் பாசமிகு கணவரும், ஸ்ரீரங்கன் (கமல்), காந்தீபன் (விமல்), கலைவாணி, கிருஷாந்தன் (குரு), சுகீசன், நிரோபன் (திலக்ஷன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரன், பிரதீனா ஆகியோரின் மாமனாரும், சதுர்ஜனின் தாத்தாவும், காலஞ்சென்ற கந்தசாமி, ரத்தினம், தங்கராசா (பிரான்ஸ்), சிவபாதம், திரவியம், அருள்ஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி தெற்கு பூனையன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 185 7957**

(CS 00538) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 06 . 1930



மறைவு
18 . 05 . 2024

## தம்பிஐயா இரத்தினம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தம்பிஐயா இரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (18.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகர் - கனகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வைரவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், அமரர் தவமணி மற்றும் இந்திராணி (பிரான்ஸ்), சந்திராதேவி (கனடா), கணேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/ இராமநாதன் கல்லூரி), வைகுந்தவாசா (லண்டன்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), ஆறுமுகதாஸ் (பிரான்ஸ்), சந்திரபோஸ் (லண்டன்), அமரர் ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் ஜெயராஜா மற்றும் நவரத்தினராசா (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (கனடா), லிங்கேஸ்வரன், விஜயலக்ஷ்மி (லண்டன்), சந்திரகாந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), விஜயசக்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (22.05.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00537) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 06 . 1937



மறைவு
18 . 05 . 2024

## வாமசக்தி சிவராஜா

நல்லூர் நாயன்மார் கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாமசக்தி சிவராஜா நேற்றுமுன்தினம் (18.05.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், கந்தையா சிவராஜாவின் அன்பு மனைவியும், சிவரூபன் (நோர்வே), சத்தியரூபன் (நோர்வே), விஜயரூபன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ன, சங்கீதா, மேனகா, ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரா, ஜொனத்தன், எரிக்கா, நிக்கோல், ரூபன்அந்தோனியோ, விக்னேஸ், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 218/1, செம்மணி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்கள்
(ரூபன், சத்தி, விஜி)
சிவராஜா - 077 791 3532
சுமதி - 077 239 9118

(cs.55128) (N.1)

# மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 04 . 1962



இறப்பு
18 . 05 . 2024

## சந்திரராசா இராஜேஸ்வரி

வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரராசா இராஜேஸ்வரி நேற்று முன்தினம் (18.05.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - கனகம்மா தம்பதியரின் மருமகளும், சொக்கலிங்கம் சந்திரராசா (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், யோகராணி, மகேஸ்வரி, ஆனந்தர், பரமநாதன், காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கராசா, ஜெயராசா, இந்திரராசா ஆகியோரின் மைத்துனியும், கீர்த்திகா (கனடா), தனாதிபன் (பிரான்ஸ்), கஜவரன் (NSB Bank பாதுகாப்பு ஊழியர் சுன்னாகம்), கோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகரன், காயத்திரி, சசிகாந்தன் (தொழில்நுட்ப உதவிஅலுவலர் மன்னார் மாவட்டசெயலகம்) ஆகியோரின் மாமியாரும், மிருஷன், சாருஷி, ஹரிஸ், சாய்வித், யித்தேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 167 9972

(CS/55124) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 06 . 1939



மறைவு
18 . 05 . 2024

## அமரசிங்கம் திலகவதி

சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடி மற்றும் படித்த மகளிர் திட்டம் மிருசுவிலை வதிவிட மாகவும் கொண்ட அமரசிங்கம் திலகவதி கடந்த (18.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதன் - இராசமணி தம்பதியரின் அன்பு மிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அமரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்பழகனின் அன்பு மிகு தாயாரும், ரவீந்திரன், காலஞ்சென்றவர் களான தினகரன், கலாவதி மற்றும் ரூபாவதி, கருணாவதி, நந்தாவதி, சுவேந்திரன் (சிறி), தயாவதி ஆகியோரின் பாசமிகு மூத்தச கோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.05.2024) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

தகவல்:
T.P.: 077 211 4427 குடும்பத்தினர்

(cr.42472) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கன்னி இலக்கை சரித்தார் வியாஸ்காந்

பஞ்சாப்புடனான நேற்றைய ஆட்டத்தில் சன்ரைஸஸ் அணி சார்பில் ஆடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியாஸ்காந் ஐ.பி.எல். தொடரில் தனது முதலாவது இலக்கைக் கைப்பற்றினார். இந்த ஆட்டத்தில் சன்ரைஸஸ் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதர்வா ரெய்ட் மற்றும் பிரப்சிம்ரன் சிங் இருவரும் சிறப்பான அடித்தளத்தை அமைத்தனர். 27 பந்துகளில் 46 ஓட்டங்களுடன் அதர்வா, நடராஜனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் பிரப்சிம்ரன் சிங் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்தார். தனது 4 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீச வந்த வியாஸ், முதலாவது பந்திலேயே பிரப்சிம்ரன் சிங்கை 45 பந்துகளில் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார். ரைலி ரோஸ்சோ 24 பந்துகளில் 49 ஓட்டங்களையும், ஜித்திச் சர்மா 15 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 214 ஓட்டங்களை பஞ்சாப் பெற்றது.

பந்து வீச்சில் நடராஜன் 33 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், வியாஸ்காந் 37 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், பட்குமின்ஸ் 36 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

215 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்க விரட்ட களமிறங்கிய சன்ரைஸஸ் அணிக்கு ஹெட் ஓட்டமெதனையும் பெறாது முதல் பந்தில் ஆட்டமிழந்தார். அபிசேக் சர்மா - ராகுல் திரிபாதி இணை வெளுத்து வாங்கியது. 18 பந்துகளில் 33 ஓட்டங்களுடன் திரிபாதியும், அபிசேக் சர்மா 28 பந்துகளில் 66 ஓட்டங்களையும், நிதிஷ்குமார் ரெட்டி 25 பந்துகளில் 37 ஓட்டங்களையும், ஹென்றிச் கலீசன் 26 பந்துகளில் 42 ஓட்டங்களையும் குவிக்க 5 பந்துகள் மீதமிருக்க அணி வெற்றியிலக்கை அடைந்தது.

ஆட்டநாயகனாக அபிசேக் சர்மா தெரிவு செய்யப்பட்டார். (ஒ-5)

ஜனாதிபதி

# தேர்தலைப் புறக்கணிப்பதே தமிழினத்துக்குப் பலமாகும்

## முன்னணி அறிக்கையூடாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படல் வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் தமிழர் ஒற்றுமையாக நிறைவேற்றப்போகும் இந்த ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பினூடாக அரசியல் ரீதியாகவும் இராஜதந்திரரீதியாகவும் ஏற்படுத்தப்படப்போகும் அழுத்தமானது தமிழினத்துக்கே மிகப் பெரிய பலத்தை வழங்கும் என்ற உண்மையை விளங்கிக்கொண்டு செயற்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கையூடாக தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளது.

அவர்களது அறிக்கையில் முக்கியமாக, ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஸ்கரிப்பதன் மூலம் மூன்று விதமான செய்திகள் உணர்த்தப்படும்.

இத் தேர்தல் மூலம் ஜனாதிபதியாக வருபவர், தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்ததன் விளைவாகவே தன்னால் ஜனாதிபதியாக வெற்றிபெற முடிந்தது என்ற நிலைமையையும் தோற்றவர்கள், தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக நம்பிக்கையைக் கொடுத்திருந்தால் தங்களால் வென்றிருக்கமுடியும் என்ற ஏக்கத்தையும் உருவாக்கும்.

தேர்தலில் வென்றவருங்கூட, தமிழ் மக்களின் வாக்குகள் இன்றி எதிர்காலத்தில் தன்னால் வெற்றிபெறமுடியாமற்போகும் என்ற உண்மையை விளங்கிக் கொண்டு செயற்படவேண்டிய அச்சத்தையும் உருவாக்கும்.


தமிழ் மக்கள் தமது வாக்குகளைத் தங்கள் இனநலன் சார்ந்தே இனிப் பயன்படுத்துவார்கள் என்பதும், இனியும் தமிழ் மக்களை வாக்களிக்கும் எடுபிடிகளாகப் பயன்படுத்தமுடியாது என்ற காத்திரமான செய்தி பிராந்திய வல்லரசுக்கும் அதனுடன் இணைந்து செயற்படும் பூகோள ஆதிக்க சக்திகளுக்கும் அவர்களின் உள்ளூர் முகவர்களுக்கும் தெட்டத்தெளிவாக வழங்கப்படும் - என்றுள்ளது. (ஒ-5)

## மரண அறிவித்தல்

### அப்பாபிள்ளை தில்லைநாதர்

(ஓய்வு பெற்ற கணக்காளர் சுகாதாரத் திணைக்களம்)

தோற்றம் 27.02.1940 — மறைவு 19.05.2024



எழுதுமட்டுவாழ் வடக்கு, கழிக்கரையைப் பிறப்பிடமாகவும், பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாபிள்ளை தில்லைநாதர் அவர்கள் நேற்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாபிள்ளை - நல்லிநாச்சன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் மருமகனும், சகுந்தலையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, ஏகாம்பரம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பகவதி, சுப்பிரமணியம், பேரம்பலம், சின்னத்துரை மற்றும் கனகசபை (தியாகு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1949 — மறைவு 05 . 19 . 2024



### தாவீது நீற்றம்மா (றோஸ்)

இராஜசிங்கம் வீதி, திருநகரைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட தாவீது நீற்றம்மா (றோஸ்) அவர்கள் நேற்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.05.2024) திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக மரியன்னை பேராலயத்திற்கு (பெரிய கோவில்) கொண்டு செல்லப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நலன் விரும்பிகள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 717 6998
077 626 2414
077 465 6998

தகவல்:
குடும்பத்தினர்.

பப்பாச்சி (பப்பாச்சி அந்தியகால சேவையின் உரிமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய ராஜபக்சவின் வழக்கு ஆவணங்கள் மாயம்


கொழும்பு, மே 20
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்த வேளையில் அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக கூறப்படும் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையங்களில் காலம் கடந்த ஆவணங்கள் அழிக்கப்படுவது வழமையான ஒரு நடைமுறை. அவ்வாறு காலம் கடந்த ஆவணங்கள் அழிக்கப்பட்ட போதே கோத்தாவின் வழக்குத் தொடர்பான கோவையும் அழிக்கப்பட்டுள்ளது. ஒரு கோவை அழிக்கப்படுவதற்கு முன்னர் அதைப் பற்றிய குறிப்பு எழுதி வைக்கப்படுவது வழமையான நடைமுறை. இந்த வழக்குத் தொடர்பான கோவை அழிக்கப்பட்ட போது அவ்வாறான குறிப்புகள் எவையும் எழுதி வைக்கப்படவில்லை எனவும் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்கில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் இந்த வழக்குத் தொடர்பான முக்கியமான ஆவணம் காணாமல் போயுள்ளது. அடுத்த தவணையின் போது வழக்குத் தொடர்பான சட்டமா அதிபரின் ஆலோசனையை மன்றுக்கு சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

கொழும்பு பித்தளைச்சந்தியில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாயவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதிர்ஷ்டவசமாக கோத்தாபய உயிர் தப்பியிருந்தார். இந்தத் தாக்குதல் தொடர்பாக பொன்னுச்சாமி கார்த்திகேசு சிவாஜி என்பவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



(அ-ஒ-6)

# கார்-மோ.சைக்கிள் நேருக்கு நேர் மோதல்

முல்லைத்தீவு, மே 20
துணுக்காயிலிருந்து மல்லாவி நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், மாங்குளத்திலிருந்து துணுக்காய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரும் நேருக்கு நேர் நேற்று மாலை மோதிக்கொண்டன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் மல்லாவி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை - காரில் பயணித்த 4 வயது குழந்தை உட்பட மூவர் காயங்களுடன் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-ஒ-35)

## தமிழ்ப்...

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் பொதுவெளியில் தெரிவித்திருந்தனர். குறிப்பாக கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தார். ஆனால் பொதுவேட்பாளரை ஆதரிக்கக் கூடாது என கட்சியின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில் பொதுவேட்பாளர் தொடர்பில் ஆராயும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் பங்கேற்றிருந்த கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, இது தொடர்பில் மத்திய குழுவில் முடிவு எடுத்து அறிவிப்பதாக இருவாரகால அவகாசம் கோரியிருந்தார். அதற்கு அமைவாக மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டிருந்தது. கூட்டத்தில் பொது வேட்பாளர் விடயம் ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்டோர் அதற்கு எதிராக கருத்துத் தெரிவித்தனர்.

ஒரு கட்டத்தில் கருத்துத் தெரிவித்த சிறீதரன், "சம்பந்தர் சொன்னதைப்போல ஒஸ்லோ அறிக்கையை எந்த ஜனாதிபதி வேட்பாளர் ஏற்றுக்கொள்கின்றாரோ அவரை ஆதரிக்கலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார். அதனை பொதுவேட்பாளரை எதிர்த்ததரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனாலும் இதை உத்தியோக பூர்வமுடிவாக அறிவிக்கவில்லை. பொதுவேட்பாளர் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றே உத்தியோக பூர்வ நிலைப்பாடாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குறித்த ஒஸ்லோ அறிக்கையில், 'தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் சுயாட்சி அதிகாரம் வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசும் புலிகளும் ஆராய்வர்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-5-110)

## உலங்குவானூர்தி...

உத்தியோகபூர்வ அறிவிப்பு எவையும் நேற்றிரவு வரையில் வெளிவரவில்லை. ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்துல்லாஹியன், கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் மாலேக் ரஹ்மதி, கிழக்கு அஜர்பைஜானுக்கான ஈரானிய ஜனாதிபதியின் பிரதிநிதி அயதுல்லா முகமது அலி அலேஹஷேம் ஆகியோர் இந்த விபத்தில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலங்குவானூர்தி கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தில் விபத்தை சந்தித்ததாகவும், விபத்து நடந்த இடத்தை அடைய மீட்புக் குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று உலங்குவானூர்திகள் பயணித்ததாகவும், அதில் இரண்டு உலங்குவானூர்திகள் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாகவும், எனினும் ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் பயணித்த உலங்குவானூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்குன் என்ற செப்புச் சுரங்கத்துக்கு அருகில் உலங்குவானூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-இ)

## வழக்கை...

பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை நீதிமன்றில் உள்ள கட்சி தொடர்பான வழக்கில் வழக்காளி கோருகின்ற நிவாரணங்களை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். கட்சியின் நிலைப்பாடுகளை நிலைநிறுத்தியாப்பினுடைய அடிப்படை விடயங்களை முன்னிறுத்தி எவ்வாறு செயலாற்றியிருக்கின்றோமோ அதனடிப்படையில் தலைவர் உட்பட அனைத்து பதவிகளுக்குமான தெரிவுகளை மீண்டும் நடத்துவதென ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

உரியவகையில் நிர்வாகத் தெரிவு நடத்தப்படாத தொகுதிக்கிளைகள், மூலக்கிளைகள் தொடர்பாக கட்சியின் மத்திய குழு கலந்தாலோசித்து அவற்றின் நிர்வாகத்தை புதிதாகத் தெரிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுவரை மாவை. சேனாதிராசாவே கட்சியின் தலைமைப் பதவியில் இருப்பார்.

முதலில் வழக்கை கைவாங்கி கட்சியை எமது வீட்டுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியை எடுத்திருக்கின்றோம் - என்றார்.

வழக்காளிகள் சட்டத்தரணிகளுடன் சுமுகத்தீர்வுக்கு இணக்கப்பேச்சு நடத்துவதற்கு மத்திய குழு உறுப்பினர்களும் சட்டத்தரணிகளுமான எம்.ஏ.சுமந்திரன், கே.வி.தவராசா ஆகிய இருவரையும் இதனை கையாளுமாறு மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, திருகோணமலை நீதிமன்றத்தில், வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்குவதாக பிரதிவாதிகளான சிறீதரன் உள்ளிட்ட சிலர் தெரிவித்திருந்த நிலையில், அந்த முடிவு தவறானது என கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்பதும், நேற்றைய கூட்டத்தில் ஏனைய உறுப்பினர்களின் முடிவுக்கே சுமந்திரனும் இணங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-110)

## ஆள்மாறாட்டம்...

பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அவரது சகோதரி செய்த முறைப்பாட்டுக்கமையவே மேற்படி 42 வயதுடைய பெண்மணி கைது செய்யப்பட்டு நீதிவான் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு மருத்துவக் காரணங்களைக் கருத்திற்கொண்டு பிணையில் விடுக்கப்பட்டுள்ளார்.

சகோதரியினுடைய ஆவணங்களைப் பயன்படுத்தி போலியான கடவுச்சீட்டை சந்தேகநபர் 2015 ஆம் ஆண்டு தயாரித்துள்ளார். அந்தக் கடவுச்சீட்டைத் தவிர்த்து கடவுச்சீட்டில் நெதர்லாந்துக்குச் சென்று அங்கு குடியுரிமையும் பெற்றுள்ளார்.

இதேவேளை, சகோதரி 2019 ஆம் ஆண்டு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கச் சென்றபோது அவரது பெயரில் முன்னரே கடவுச்சீட்டு எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. சகோதரி வெளிநாட்டில் இருந்தமையால் அவர் நாடு திரும்பிய பின்னர் நடவடிக்கை எடுப்பதற்காக சகோதரி காத்திருந்துள்ளார். இதற்கிடையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி வங்கிப் புத்தகம் பெற்றமையையும் சகோதரி அறிந்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் தாயாரின் இறுதிக்கிரியைகளுக்காக நெதர்லாந்திலிருந்து சகோதரி யாழ்ப்பாணத்துக்கு இந்த மாதம் வந்துள்ளார்.

இதையடுத்து யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன்பிரகாரம் சந்தேக நபரை யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் கைதுசெய்து யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்ற நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். இதன்போது மருத்துவக் காரணங்களால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வழக்கு இன்று மீண்டும் அழைக்கப்படவுள்ளது. (அ-ஒ-26)

## இன்று...

இதனால் தற்போது தென்னிலங்கை உட்பட கொழும்பு, புத்தளம் மாவட்டங்கள் மற்றும் மலையகத்தில் நிலவும் தொடர் மழையுடன் கூடிய காலநிலை வடக்கிலும் பரவலடையும் சாத்தியம் நிலவுகிறது.

இன்று பிற்பகல் முதல் நாளை மறுதினம் புதன்கிழமை வரையான 48 மணிநேரங்கள் வடக்கு மாகாணம் முழுவதும் கனமழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என வானிலை எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

## ரணில்...

தினேஸ்குணவர்த்தனவும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகமாநாட்டிலும் தமிழரசின் பிளவு

வவுனியா, மே 20

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பை கட்சியின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் புறக்கணித்து வெளியேறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமையில் மு.ப. 10.30 மணியில் இருந்து இரவு 7 மணி வரை நடைபெற்றது. கூட்ட முடிவில் தீர்மானங்களை அறிவிப்பதாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஊடகவியலாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

கூட்டம் முடிவடைந்ததும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட் உள்ளிட்ட சிலர் வெளியில் வந்தனர்.

ஊடகவியலாளர் ஒருவர், பேச்சாளர் (எம்.ஏ.சுமந்திரனிடம்) தீர்மானங்களை தராமல் செல்கிறீர்கள் எனக்கேட்ட போது, அதற்கு எம்.ஏ.சுமந்திரன், உள்ளே இருக்கிறார்கள். அவர்களிடம் போய் கேளுங்கள் எனப் பதிலளித்தார்.

ஊடகவியலாளர்கள் மண்டபத்துக்குள் சென்றதும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பேச்சாளர் எங்கே என வினவியபோது, அவர் வெளியில் செல்கிறார் என்று ஊடகவியலாளர்கள் கூறினர். உடனேயே அங்கிருந்தவர்கள் எம்.ஏ.சுமந்திரனை அழைத்திருந்தார்கள். ஆனாலும் அவர் சமுகளிக்காது சென்றுவிட்டார்.

கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை ஊடக சந்திப்பு நடத்துமாறு கூறினார். கூட்டத் தீர்மானங்களை ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்திருந்தார். சட்ட விடயங்களை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்திருந்தார்.

இதேவேளை - கட்சியின் செயலர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தையும், ஊடக மாநாட்டில் அமருமாறு கேட்கப்பட்ட போதும் ஊடக மாநாட்டில் அமராது அருகில் நின்றிருந்தார். (ஓ-18)


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | K.K.S றோட், சுன்னாகம்

**BARATHY**

சித்தன்கேணி

மிகப் பிரபலமான கல்வி நிறுவனத்தில் இணைந்துகொள்வதில் நீங்களும் பெருமையடைவீர்கள் பொறுத்திருங்கள்...

**JUNE 1 இல் ஆரம்பம்**

**A/L 2026**

**கலை, வர்த்தகப் பிரிவு**

**உங்கள் அனுமதிகளை 23.05.2026 இலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்**

அலுவலகத் தொடர்புகளுக்கு:

- யாழ்நகர் - 077 220 9651
- சுன்னாகம் - 075 916 0417
- சித்தன்கேணி - 077 940 8682

மேலதிக தொடர்புகளுக்கு:

**077 376 3511**



## மணமகள் தேவை

1986ம் ஆண்டு பிறந்த விசாக நட்சத்திரம் U.K யில் Degree முடித்து தற்சமயம் கொழும்பில் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கும், 1987ம் ஆண்டு பிறந்த அத்த நட்சத்திரம் குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்ற கொழும்பில் உயர் பதவியிலிருக்கும் மணமகனுக்கும் மணமகள் தேவை.

தொடர்பு: **077 297 9960**



## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/55110) J-1

**074 173 7684**





ஓம் சக்தி

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்

## ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் கண்ணகைபுரம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்கலகரமான குரோதி வருடம் வைகாசித் திங்கள் ஒன்பதாம் நாள் (22.05.2024) புதன்கிழமை வைகாசி விசாக தினத்தன்று அம்பிகை ஆலயத்தில் கண்ணகை அம்மனுக்கும், முருகப்பெருமானுக்கும், வைரவருக்கும் விசேட பூஜைகள், பொங்கல் மற்றும் அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன. மேலும் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது எனவே அம்பிகை அடியார்கள் ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளில் கலந்து அம்பிகையின் திருவருளை பெற்று உய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தொலைபேசி:
021 315 6666
077 717 4279

நன்றி

ஆலய நிர்வாக சபையினர்

(CS/55085) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 04 . 1950

மறைவு 18 . 05 . 2024

### மாணிக்கம் செல்வரத்தினம்

(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துச் சபை நடத்துநர் - யாழ்ப்பாணம் - மன்னார்)

குமாரசாமி வீதி புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்வரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (18.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ஜெயதீபன் (கனடா), விஜிந்தன் (லண்டன்), சுகர்னா (லண்டன்), ஜீவிதா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகன்யா, நித்தியா, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரவி, சகிர்ஷ், அபீனா, சபீனா, கன்சிகா, அகீஸ், அர்வின் வர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(CS/55125) J-1

தகவல்:
குடும்பத்தினர்


உ



விநாயகர் துணை | பேச்சியம்மன் துணையுடன்

**மட்டக்களப்பு மந்திரப் பூசகர் முத்துலிங்கம் சிவசிறி சிறிதாஸ் குருக்கள் ஐயா (பதிவுசெய்யப்பட்ட குருக்கள்) பதிவு இல HA/BT/0128**

- சிறந்த முறையில் வீடுகாவல் பண்ணுதல்
- தொழிலகம் காவல் பண்ணுதல்
- வியாபாரம் விருத்தியடைய செய்து கொடுத்தல்
- குழந்தை இல்லாதவருக்கு மாந்திரிக, பச்சிலை முகிலி சக்தியால் குழந்தை இல்லாக் குறை தீர்த்துக் கொடுக்கப்படும்.
- கல்வியில் குறைபாடடைந்த மாணவ, மாணவிகளுக்கு கல்வியில் மேலோங்கி வரச் செய்து கொடுத்தல்.
- தடைப்பட்ட திருமணம் தடைநீக்கிச் செய்து கொடுக்கப்படும்.
- தொழிலகத்தில் பதவி உயர்வு பெறச் செய்து கொடுக்கப்படும்.
- பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்த்துக் கொடுக்கப்படும்.
- உடலில் பேய்களால் சூழப்பட்ட நோய்களை நீக்கி கைகண்ட முறையில் சுகமளித்து புதிய வாழ்வு கொடுக்கப்படும்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு யந்திரத் தகடு மூலம் செய்து கொடுக்கப்படும். வெளிநாட்டிலுள்ள குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொடுக்கப்படும்.
- செவ்வாய், சனி, நாகதோஷம் போன்ற தோஷங்களை மட்டக்களப்பு மாந்திரீக முறையில் தீர்த்துக் கொடுக்கப்படும்.
- உடலில் உள்ள பலபல நோய்களை மாந்திரீக முறையிலும் பச்சிலை முகிலி முறையாலும் தீர்த்துக் கொடுக்கப்படும்.
- கிரகங்கலால் ஏற்பட்ட தொழில் தொடர்பான தொல்லைகளை தீர்த்துக் கொடுக்கப்படும்.
- தொழில் விருத்திக்கு யந்திரங்கள் செய்து கொடுக்கப்படும்.
- கடன் தொல்லைப் பிரச்சனையை தீர்த்துக் கொடுக்கப்படும்.
- கொடுக்கல், வாங்கல் பிரச்சனைகளை நீக்கிக் கொடுக்கப்படும்.
- பூத, பிரேத, பசாசி, பில்லி, வஞ்சனைகளை, சூனியம், கண்ணூறுகளால் கஷ்டப்படும் மானிடர்க்கு மாந்திரீகத்தால் சுகவாழ்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

**பேச்சியம்மன் துணையுடன் இவையனைத்தும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.**

(CS 547) V-1

தொர்பு கொள்ள வேண்டிய இல: **077 212 4580**

முகவரி: முத்துலிங்கம் சிவ்சிறி சிறிதாஸ் குருக்கள் சின்ன ஊறணி, மட்டக்களப்பு.


:021 493 0000 - :021-493 1111 ...news@uthayan.com advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org